# தகவல் ஏடு
# ‘ஜாப்அக்ஸெஸ்’ (‘வேலைவாய்ப்பு’) (JOBACCESS)

உடலியலாமை உள்ளவர்கள், பணியமர்த்துனர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் ஆகியோருக்கான பணியிடம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கான தேசிய அளவிலான மையமே ‘ஜாப்அக்ஸெஸ்’ என்பதாகும்.

‘உடலியலாமை உள்ளவர்களுக்கான வேலைவாய்ப்புகளை விரைவுபடுத்த’க் கூடிய தகவல்கள் மற்றும் மூலவளங்களை ஒன்றிணைப்பதற்காக அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் ‘ஜாப்அக்ஸெஸ்’ எனும் வசதி உருவாக்கப்பட்டது.

வேலைகளைத் தேடியெடுத்து அவற்றைத் தக்க வைத்துக்கொள்ளவும், இன்னும் நல்ல வேலைகளுக்கு உயர்வு பெறவும், நிதியுதவி மற்றும் இதர வகைப்பட்ட உதவிகளைப் பெறவும், தமது பணியிடத் திறன்களை விரிவுபடுத்திக் கொள்ளவும், இன்னும் பல வழிகளிலான பலன்களைப் பெறவும் ‘ஜாப்அக்ஸெஸ்- இனால் உடலியலாமை உள்ளவர்களுக்கு உதவ இயலும்.

பணியிடத்தில் காணப்படும் பன்முகத்தன்மையில் மகிழவும், உடலியலாமை உள்ளவர்களுக்கு வேலை கொடுப்பதினால் கிடைக்கும் ஆதாயங்களைப் பற்றி விளங்கிக்கொள்ளவும், உடலியலாமை உள்ளவர்களுக்கான வேலைகளை உருவாக்கவும், சரியான ஆட்களைத் தெரிவு செய்து அவர்களைத் தக்க வைத்துக்கொள்ளவும், நிதியுதவிகளையும் இதர வகைப்பட்ட உதவிகளையும் பெறவும், உடலியலாமை உள்ளவர்களை வேலையில் அமர்த்துவது சம்பந்தப்பட்ட யுக்திகளையும் திட்டங்களையும் உருவாக்கவும், மற்றும் இன்னும் பல வழிகளிலும் ‘ஜாப’அக்ஸெஸ்- இனால் வேலை தரும் பணியமர்த்துனர்களுக்கு உதவ இயலும்.

வேலைவாய்ப்பு சேவை வழங்குநர்கள் தமது பங்கினைப் புரிந்துகொள்ளவும், உடலியலாமை உள்ளவர்களது தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் வகையிலான சேவைகளை உருவாக்கவும், மற்றும் இன்னும் பல வழிகளிலும் ‘ஜாப்அக்ஸெஸ்- இனால் அவர்களுக்கு உதவ இயலும்.

பின் வருவன போன்ற பல வகைப்பட்ட தகவல்கள் ‘ஜாப்அக்ஸெஸ்- இன் வலைத்தளத்தில் உள்ளன; பணியிட மாற்றியமைப்புகள் மற்றும் ஊதியத் தள்ளுபடிகள் ஆகியவற்றிற்கான நிதியுதவி; வேலை ஒன்றிற்காக விண்ணப்பிப்பது மற்றும் உடலியலாமை உள்ள ஒருவரை வேலைக்கு எடுத்துக்கொள்வது ஆகியவற்றைப் பற்றிய ஆளெடுப்பு யோசனைக் குறிப்புகள்; கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களுக்கான தொடர்பு இணைப்புகள்; உடலியலாமை ஒன்றை வெளிப்படுத்துகை செய்யும் விதம்; உடலியலாமை உள்ளவர்கள் மற்றும் பணியமர்த்துனர்கள் ஆகிய இருவருக்கும் உள்ள உரிமைகள் மற்றும் பொறுப்புகள்; பணியமர்த்துனர்களுக்குத் தேவைப்படும் கருவிகள் மற்றும் மூலவளங்கள் மற்றும் வளைந்துகொடுக்கும் தன்மையுள்ள பணியிட சூழலை எப்படி உருவாக்குவது என்பதைப் பற்றிய விடயங்கள்; மற்றும் பல வகைப்பட்ட அரசாங்க ஆதரவுதவிகள் மற்றும் திட்டங்களுக்கான தொடர்பு இணைப்புகள்.

‘ஜாப்அக்ஸெஸ்’ அமைப்பினைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு www.jobaccess.gov.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள், அல்லது ‘ஜாப்அக்ஸெஸ்’ அறிவுரைஞர் ஒருவரை 1800 464 800 எனும் இலக்கத்தில் அழையுங்கள் - கைப்பேசியில் இருந்து செய்யப்படும் அழைப்புகளுக்குக் கட்டணங்கள் அறவிடப்படும்.

---

Australian Government

JobAccess is the national hub for workplace and employment information for people with disability, employers and service providers.

**1800 464 800** **www.jobaccess.gov.au**